யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020–தரம் 06
**First Term Examination – 2020–Grade 06**

| சங்கீதம் | 42 | T | I, II, | இரண்டு மணித்தியாலம் 30 நிமிடங்கள் 2hours 30 Mins |
|---|---|---|---|---|

சுட்டெண் Index No

# சங்கீதம்

## பகுதி I

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. நுண் கலைகளில் சிறந்தது?
1)சிற்பம் 2) ஓவியம் 3) சங்கீதம் 4) நாடகம்

02. சூழலில் கேட்கும் இனிய ஒலிகளிலொன்று?
1) மணியோசை 2) வாகனங்களின் சத்தம்
3) சுவரில் ஆணி அறையும் ஒலி 4) மாணவர்களின் சத்தம்

03. புத்தளிப்புக் கருவிகளில் ஒன்று
1) வீணை 2) வயலின் 3) சல்லாரி 4) ஆர்மோனியம்

04. இசை பயில்வோம் பாடலை இயற்றியவர்?
1) தேசிக விநாயகம்பிள்ளை 2)பொன் ஸ்ரீ வாமதேவன்
3) புரந்தரதாஸர் 4) தஞ்சை கே. பொன்னையாபிள்ளை

05. ஒரு நாட்டின் பெருமையை கூறும் கீதம்?
1) கல்லூரிக்கீதம் 2) கரோல் கீதம் 3) தேசிய கீதம் 4) சஞ்சாரி கீதம்

06. கீதம், வாத்தியம் இரண்டும் சேர்ந்தது?
1) நடனம் 2) நாடகம் 3) ஓவியம் 4) சங்கீதம்

07. உழவர் திருநாள் என்பது?
1) தைப்பொங்கல் 2)தீபாவளி 3)புதுவருடப்பிறப்பு 4)ஆடிப்பிறப்பு

08. மாதாவிற்கு ஒப்பிடப்படுவது?
1) நாதம் 2) சுருதி 3) லயம் 4) ஆவர்த்தம்

09. மண்ணை நம்பி எனும் பாடல் ஓர்?
1) கீதம் 2) கீர்த்தனை 3) நாட்டார்பாடல் 4) தேசியகீதம்

10. செவிக்கு இனிமையைக் கொடுக்கும் இனிய ஒலி?
1) இரைச்சல் 2) சுருதி 3) நாதம் 4) லயம்

11. புதுவருடப்பிறப்பு கொண்டாடப்படும் மாதம்?
1) பங்குனி 2) மார்கழி 3) சித்திரை 4) ஆனி

12. சுருதிக்காக பயன்படுத்தப்படும் வாத்தியம்?
1) வயலின் 2) சுருதிப்பெட்டி 3) நாதஸ்வரம் 4) தவில்

13. யோகிகளால் உணரப்படும் நாதம்?
1) ஆகத நாதம் 2) அநாகத நாதம் 3) செயற்கை நாதம் 4) பிராணி சம்பவ நாதம்

14. காதால் கேட்டு இரசிக்கும் கலை?
1) நடனம் 2) நாடகம் 3) சிற்பம் 4) சங்கீதம்

15. சரஸ்வதியின் கையில் காணப்படும் வாத்தியம்?
1) புல்லாங்குழல் 2) உடுக்கு 3) வீணை 4) வயலின்

16. சங்கீதம் பயில்வதனால் விருத்தியடையும் பண்புகளில் ஒன்று?
1) கோபம் 2) வெறுப்பு 3) பொறாமை 4) ஒழுக்கம்

17. சிரவண கலை எனப்படுவது?
1) ஓவியம் 2) நடனம் 3) சங்கீதம் 4) நாடகம்

18. சுருதியின் வகை
1) 4 2) 3 3) 2 4) 5

19. தமிழர்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் ஒன்று?
1) வெசாக் 2) ரம்ழான் 3) பொசன் 4) தைப்பொங்கல்

20. கலைகளின் மொத்த எண்ணிக்கை?
1) 64 2) 32 3) 46 4) 15

(1 X 20 = 20 புள்ளிகள் )

## பகுதி II

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.

01)
1. புத்தளிப்புக் கருவிகள் என்றால் என்ன? ( 03 புள்ளி )
2. புத்தளிப்புக் கருவிகள் ஆக்கப் பயன்படுத்தப்படும் பொருட்கள் எவை? ( 03 புள்ளி )
3. புத்தளிப்புக் கருவிகள் இரண்டு தருக? ( 04 புள்ளி )

02) சங்கீதம் பற்றி 05 வசனங்கள் எழுதுக? ( 10 புள்ளி )

03)
1. நாதம் என்றால் என்ன? ( 02 புள்ளி )
2. நாதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை? ( 04 புள்ளி )
3. அவற்றை விளக்குக? ( 04 புள்ளி )

04)
1. சுருதி என்றால் என்ன? ( 04 புள்ளி )
2. சுருதியின் மறு பெயர்கள் 02 தருக? ( 04 புள்ளி )
3. சுருதியின் வகைகளைத் தருக? ( 02 புள்ளி )

05) தைப்பொங்கல் அல்லது புதுவருடப்பிறப்புப் பற்றி 05 வசனங்கள் எழுதுக ? ( 10 புள்ளி )